

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொது நூலக இயக்ககம் சார்பில் 29.80 கோடி ரூபாய் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 110 கூடுதல் நூலகக் கட்டடங்கள், பரமக்குடி முழுநேர கிளை நூலகக் கட்டடம் மற்றும் 70 சிறப்பு நூலகங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி. சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர் சங்கத்தின் சார்பில்.

## பக்ரைனில் கலைஞர் 102-வது பிறந்த நாள் விழா: மருத்துவ முகாம்!

### முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் ஆபீத் அலி ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

பக்ரைன், ஜூன் 11 -

வளைகுடா நாடான, பக்ரைன் நாட்டில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை, அங்கு வாழும் தமிழ் மக்களின் நலன் காக்கும் நிகழ்ச்சியாக ஜூன் 7 சனிக்கிழமையன்று கொண்டாடப்பட்டது.

வரும்முன் காப்போம். இல்லம் தேடி மருத்துவம். போல. "இன்னுயிர் காப்போம்" என்னும் பெயரில். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு பக்ரைன் NRTIA, வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர் சங்கத்தின் சார்பில். அமைப்பின் தலைவர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில், இணைச் செயலாளர் ஆபீத் அலி ஒருங்கிணைப்பில். மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம், ஹமலா பகுதியில் உள்ள, ஷிஃபா அல் ஜெசிரா மருத்துவமனையில் கடந்த 7 ஆம் தேதி நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்த இன்னுயிர் காப்போம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உடல் பரிசோதனைகள் செய்து பலன் பெற்றார்கள். நிகழ்ச்சியில் கலந்த கொண்டவர்கள் பலர், கடல் கடந்து வாழும் தமிழர்களின் நலன் காக்கும் அரசாகத்தான் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செயல் படுகிறது என்று பலரும் பாராட்டினார்கள்.

# இந்தியாவின் வளர்ச்சி இஞ்சினாக தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

பெண்கள் தலைமையேற்று நடத்தக் கூடிய 8 ஆயிரத்து 400 நிறுவனங்களுக்கு 2022ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 267 கோடி ரூபாய்க்கு இந்தத் திட்டம் மூலம் கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது. ஊரகப் பகுதிகளில், 1 இலட்சம் பேர் புதிய தொழில்கள் தொடங்கவும், 53 ஆயிரம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இந்தத் திட்டம் சாதனை படைத்திருக்கிறது.

அதேபோன்று, பணிபுரியும் பெண்களுக்காக தமிழ்நாடு முழுவதும் நாம் தொடங்கி வரும் 'தோழி' விடுதிகள் திட்டத்திலும் உலக வங்கியின் பங்கு இருக்கிறது. கூடிய விரைவில், சென்னையில் தாழ்தள எலெக்ட்ரிக் பேருந்துகள் இயங்கப்போகிறது. அதற்கான திட்டத்திலும் உலக வங்கி நமக்காக உதவியிருக்கிறார்கள்.

மூன்று கட்டமாக செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் மூலமாக, நம்முடைய மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகிக்கிறது. இதில், உலக வங்கி பெரிய அளவில் உதவியிருப்பதுடன், இந்தியா முழுவதும் செயல்படுத்துவதற்கான மாடலாக தமிழ்நாட்டில் இந்தத் திட்டம் வெற்றியடைந்திருக்கிறது என்று பாராட்டியும் இருக்கிறார்கள்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் 750 கி.மீ. சாலைகளை மேம்படுத்தி, விபத்துத் தடுப்பு பகுதிகள் உட்பட பல்வேறு பராமரிப்பு பணிகளை 2 ஆயிரம் கி.மீ. சாலைகளில் மேற்கொள்ள உதவியிருக்கிறது.

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டமானது நீர்ப்பாசனத் துறையின் நவீனமயமாக்கல் முயற்சிகளுக்கு வித்திட்டிருக்கிறது. இதனால், வேளாண்துறை மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### 'தமிழ்நாடு கடலோர பேரிடர் துயர் தணிப்புத் திட்டம்'

மிகப்பெரிய கடலோர பரப்பைக் கொண்டிருக்கக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு இருப்பதால், புயல் உள்ளிட்ட பேரிடர்களால் பாதிக்கப்படக்கூடிய சூழல் நிலவுகிறது. அதற்கு உதவுகின்ற வகையில், 'தமிழ்நாடு கடலோர பேரிடர் துயர் தணிப்புத் திட்டம்' உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு, பேரிடர்களை தாங்கக்கூடிய உட்கட்டமைப்புகளையும், முன்கூட்டியே எச்சரிக்கை தரக் கூடிய அமைப்புகளையும் உருவாக்கி இருக்கிறோம்.

**இந்தியாவிலேயே அதிகமாக நகரமயமாக்கல் நடைபெறும் மாநிலம் தமிழ்நாடுதான். 2030ஆம் ஆண்டுக்குள் 63 விழுக்காடு தமிழ்நாடு மக்கள் நகர்ப்புறங்களில்தான் வசிப்பார்கள்.**

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற நம்முடைய கோட்பாட்டின்படி, பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பவர்களுக்கும் சொந்த வீடுகள் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கனவு. அந்த வகையில், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற, சுற்றுச்சூழலுக்கு உகந்த குடியிருப்புகளை ஏழை மக்களுக்கு உருவாக்கித் தருவதற்காக நம்முடைய அரசின் நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்திற்கு 'டெவலப்மண்ட் பாலிசி லோன்' என்ற வகையில் 190 மில்லியன் டாலரை உலக வங்கி கடனாக வழங்கியிருக்கிறார்கள்.

## தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பே பெண்கள்தான்!

### தமிழ்நாட்டுக்கு உலக வங்கி கடனுதவி

மொத்தம், 1.12 பில்லியன் டாலர் அளவுக்கு உலக வங்கியின் கடனுதவியில்,

1) தமிழ்நாடு கிராமப்புற புதுவாழ்வுத் திட்டம்

2) ஒன்றிய அரசின் விருதைப் பெற்ற தமிழ்நாடு நவீன பாசன வேளாண்மைத் திட்டம்

3) தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுத்திட்டம்

4) மாற்றுத்திறனாளி தோழர்களுக்கு ஒருங்கிணைப்பு, தடையற்ற சூழல் மற்றும் வாய்ப்புகளை வழங்கும் 'உரிமைகள்' திட்டம்

5) அணைகளைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் இரண்டாவது கட்டம்

6) தமிழ்நாடு காலநிலை நெகிழ்வு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

7) சென்னை நகர கூட்டாண்மை நீடித்து நிலைக்கத்தக்க நகர்ப்புற சேவைகள் திட்டத்தின் முதற்கட்டம் என்று ஏழு திட்டங்கள் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கிறது.

இவை அனைத்தும் தனிப்பட்ட முன்னெடுப்புகளாக இல்லாமல், பல்வேறு கட்டமாக செயல்படுத்தும் நீண்ட நெடிய கூட்டாண்மைக்கு இலக்கணமாக இருந்து வருகிறது.

வெறும் கடனுதவி என்று இதில் உலக வங்கியின் பங்கை, நாம் சுருக்கிப் பார்க்க முடியாது. அதையும் தாண்டி, நீடித்த நிலையான மேம்படத்தக்க வளர்ச்சியை தமிழ்நாடு அடைய வேண்டும் என்கிற ஆழ்ந்த அக்கறையின் வெளிப்பாடுதான் இது.

வருங்காலத்தில், உலக வங்கி உதவியுடன் 409.79 மில்லியன் டாலர் மதிப்பிலான முக்கியமான சில திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தப் போகிறோம்.

### தமிழ்நாட்டில் செயல்படுத்த உள்ள முக்கியமான திட்டங்கள்!

முதலாவதாக, 'WESAFE' எனும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம். கடந்த ஆண்டு ஜீன் மாதம் துணை முதலமைச்சர் அவர்களால் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்றால் அது பெண்களின் பங்களிப்பு இல்லாமல் முடியவே முடியாது. தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பே பெண்கள்தான். விவசாயம் அல்லாத, வளர்ந்து வரும் துறைகளில் பெண் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன், அடுத்த 5 ஆண்டுகளில் ஆயிரத்து 185 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கி உதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

**இரண்டாவதாக, தமிழ்நாடு - கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதாரத்தை நிலையான முறையில் பயன்படுத்துதல் திட்டம்.**

**மூன்றாவதாக, தமிழ்நாடு கிராமப்புற புதுவாழ்வுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம்.**

உலக வங்கியுடன் சேர்ந்து இப்படி இன்னும் பல திட்டங்களை செயல்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்ற என்னுடைய அரசு ஆர்வமாக இருக்கிறது. அதற்கு நம்முடைய Partnership தொடர வேண்டும்!

9.69 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியுடன் இந்தியாவின் வளர்ச்சி இஞ்சினாக தமிழ்நாடுதான் இருக்கிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டின் GSDP 36 இலட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

### இலக்குகளை எட்ட உலக வங்கியின் உதவி!

2030இல் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்று ஒரு பெரிய இலக்குடன் தமிழ்நாடு பயணிப்பது என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். அந்த இலக்கை அடைவதில் உலக வங்கியுடனான நம்முடைய உறவு வெறும் கடனுதவி சார்ந்தது மட்டுமல்ல. Technology, Policy Making மற்றும் Knowledge சார்ந்த ஒரு Partnership ஆக தான் இதை நான் பார்க்கிறேன்.

குறிப்பாக, காலநிலை மாற்றம் சார்ந்த நடவடிக்கைகள், SDG இலக்குகள், மகளிருக்கான அதிகாரம் வழங்குதல் ஆகிய இலக்குகளை எட்டுவதில் உலக வங்கியின் உதவி இன்றியமையாதது.

நம்முடைய Targetஐ Reach செய்வதில் இருக்கும் சில சவால்களையும் நாம் யோசிக்கவேண்டும்என்றுநினைக்கிறேன்.

குறிப்பாக, வளர்ச்சி கடன்களுக்கான வட்டி விகிதம் ஆண்டுக்கு 6 முதல் 7 விழுக்காடு என்று அதிக அளவில் இருக்கிறது.

> **"9.69 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியுடன் இந்தியாவின் வளர்ச்சி இஞ்சினாக தமிழ்நாடுதான் இருக்கிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டின் GSDP 36 இலட்சத்து 56 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது."**

வரும் காலங்களில், புதுமையான மாற்றுதலுக்குரிய கடனுதவியை வழங்கி, மக்களுக்கு தேவையான சமூக பொருளாதார மேம்பாட்டு தேவைகளுக்கான முதலீடுகளுக்கு உலக வங்கி உதவும் என்று எதிர்பார்க்கிறோம்.

நீண்ட கால இலக்குகளை எட்டுவதில், ஒரு மாடல் Stateஆக தமிழ்நாட்டை உருவாக்க உலக வங்கியுடன் தமிழ்நாடு அரசு தொடர்ந்து இணைந்து செயல்படும்!

நம்முடைய இந்தப் பயணம் புதுமை, சமூக பொருளாதார சமநிலை மற்றும் நிலையான வளர்ச்சி என்கிற இலக்கில் நிச்சயம் வெற்றியடையும்! அதற்கு தொடர்ந்து உங்களுடைய ஆதரவு வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க பி.கே. மூக்கையா தேவர் அவர்கள் மணிமண்டபம் அமைய உள்ள இடத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கழகத்தினர், அதிகாரிகள் பங்கேற்றனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர இலக்கிய அணி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றுதல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நகரக் கழகச் செயலாளர் தி.வை.இரவி தலைமையில் நகர இலக்கிய அணி அமைப்பாளர் பி.எல்.ஆர்.யோகா ஏற்பாட்டில் 6 வது வார்டியில் நடைபெற்றது இதில் மாவட்டக் கழகச் செயலாளர் சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு புதிய கழக கொடி ஏற்றி ஏழை எளிய பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட 1600 க்கு மேற்பட்ட நபர்களுக்கு பல்வேறு நலத்திட்டம் உதவிகள் அறுசுவை உணவு வழங்கினார் உடன் மேயர் ஜி.உதயகுமார், ஜி.ராஜேந்திரன் , நகர மன்ற உறுப்பினர் தேவி யோகா, சலீல், அசோகுமார், பாஸ்கர், ஆறுமுகராஜா, கோகுல், உள்பட பலர் உள்ளனர்.